**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.48/2024**

**தேதி : 11.09.2025**

**(வா.சா.1) – திருமதி. நாகரத்தினம்**

**சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை :– (2ம் பிரதிவாதி தரப்பில்)**

1. நான் பாகப்பிரிவினை கோரி அசல் வழக்கு தாக்கல்செய்துள்ளேன். 2ம் வாதி என்னுடன் பிறந்த சகோதரி. 1ம் பிரதிவாதி என்னுடன் பிறந்த மூத்த சகோதரர். தாவாச்சொத்து வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் எங்கள் தகப்பனார் கிரையம் பெற்ற சொத்து என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் ஆகும். அசல் ஆவணம் 1ம் பிரதிவாதியிடம் உள்ளது. வா.சா.ஆ.1 கிரையப்பத்திரம் பற்றிய விபரம் எனக்கு தெரியும். காளியப்பகவுண்டர் மகன் காளியப்பகவுண்டர், காளியப்பகவுண்டர் மகன் பழனிச்சாமி கவுண்டர் மற்றும் பழனி கவுண்டர் மகன் காளியப்பகவுண்டர், கருப்பண்கவுண்டர் மகன் காளியப்பகவுண்டர் மேற்படி நால்வருக்கும் ஆதியில் பாத்தியப்பட்டது என்றால் எனக்கு மேற்படி விபரங்கள் தெரியாது.

2. என் தகப்பனார் மேற்படி நால்வரின் பொதுஅதிகார முகவரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளார் என்றால் சொட்டைக்கவுண்டரிடமிருந்துதான் என் தகப்பனார் கிரையம் பெற்றார். வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் பொது அதிகார முகவர்தான் என் தகப்பனாருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் சர்வே எண்.396/1ல் மொத்த விஸ்தீரணம் ஏக்கர் 12 செண்டு 33ல் தனித்த மால்கள் கண்டு 20 சென்டு விஸ்தீரணம் கிரையம் பெறப்பட்டதாக மேற்படி கிரைய ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்பட்டபோது பட்டா எண்.224 என்று சொன்னால் எனக்கு தெரியாது.

3. என் தகப்பனார் கிரையம் பெற்ற வா.சா.ஆ.1ல் வடக்கில் அமராவதி இடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கிழக்கில்

காளியப்பகவுண்டர் இடம் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் இருக்கலாம். தெற்கில் அழகம்மாள் இடம் என்றால் சரிதான். என் தகப்பனார் வாங்கிய இடத்திற்கும் மேல்புறம் 5 அடி அகல பாதை உள்ளது என்றால் சரிதான். என்னுடைய வழக்குரையில் சர்வே எண்.396/1ல் சொத்துவிபரம் குறிப்பிட்டு அதன் தற்கால சப்டிவிசன் சர்வே எண்.396/3 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.396/1–க்குரிய அ பதிவேட்டை எனது தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

4. என் தகப்பனார் 1984ம் வருடம் இறந்துவிட்டார். என் தகப்பனாரின் இறப்புச்சான்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, என்னால் தாக்கல் செய்ய முடியும். என் தாயார் வேலாத்தாள் என் தகப்பனார் இறப்பதற்கும் ஒரு வருடம் முன்பாக இறந்துவிட்டார். என் பெற்றோருக்கு நாங்கள் இரண்டு ஆண் மக்கள், இரண்டு பெண் மக்கள் என்று சொன்னால் சரிதான். குணசேகரனுக்கு மூத்தவர் ராஜேந்திரன். ராஜேந்திரன் 1989ம் ஆண்டு இறந்துவிட்டார். ராஜேந்திரன் இறப்பதற்கு முன்பே எனது தாயார் வேலாத்தாள் இறந்துவிட்டார். என் பெற்றோர் மற்றும் ராஜேந்திரனின் இறப்புச்சான்று மற்றும் வாரிசுச்சான்று தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

5. வழக்குச் சொத்தில் 6000 சதுரடியை 2 முதல் 6 பிரதிவாதிகள் ஆக்கிரமித்து வீடு கட்டிக்கொண்டதாக வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கும் ஒரு மாதம் முன்பாகத்தான் வீடு கட்டப்பட்ட சங்கதி எனக்கு தெரியும் என வழக்குரையில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியின் தாயார் தாயம்மாள் யாரிடமிருந்து கிரையம் பெற்றார் என்று எனக்கு தெரியாது. 16.01.1989ல் மேற்சொன்ன தாயம்மாள் 5 செண்டு நிலம் எனது தகப்பனாருக்கு கிரையம் கொடுத்தவர்களிடமிருந்த கிரையம் பெற்றுள்ளார் என்று சொன்னால் எனக்கு தெரியாது.

6. மேற்படி தாயம்மாளின் கிரையப்பத்திர விபரம் எனக்கு எதுவும் எனக்கு தெரியாது. தாயம்மாள் கிரையம் பெற்ற பின்னர் 1990ல் வீடு கட்டி தன்

கணவர் மற்றும் மக்களுடன் குடியிருந்து வந்தார் என்று சொன்னால் எனக்கு தெரியாது. மேற்படி இடம் கோதைமங்கலம் கிராமத்திற்கு உட்பட்ட இடம் என்றால் சரிதான். அவர் கோதைமங்கலம் ஊராட்சிக்கு வரிவிதிப்பு எண்.964ல் வரி செலுத்தி வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. அந்த வீட்டிற்கு அப்போதே கதவு எண்.5 என எண் வழங்கப்பட்டு தாயம்மாள் குடும்பத்துடன் குடியிருந்து வந்ததாகச் சொன்னால் எனக்கு தெரியாது.

7. தாயம்மாளின் கிரையப்பத்திரத்தில் கிழக்கு நான்கு மாலாக என் தகப்பனார் பச்சைமுத்துவின் இடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்பதால் எங்கள் இடம் என்று நாங்கள் உரிமை கொண்டாடுகிறோம் என்றால் அப்படியில்லை. தாவாச்சொத்தைப் பொறுத்து குணசேகரன் பழனி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.611/1999 என்ற வழக்கை விளம்புகை கோரியும் ஆக்கிரமிப்பை நீக்கி சுவாதீனம் கோரியும் தாக்கல் செய்திருந்தார் என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கில் 2ம் பிரதிவாதி சுப்பிரமணியின் சகோதரர் ராமபோயன் மற்றும் 2ம் பிரதிவாதியின் தாயார் தாயம்மாள் மற்றும் ஒரு முருகேசன் ஆகியோர் பிரதிவாதிகள் என்று சொன்னால் எனக்கு தெரியாது.

8. மேற்படி அ.வ.எண்.611/1999 வழக்கு 23.03.2016 அன்று பழனி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தால் மேல்நடத்தாத காரணத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுக்க எனது சகோதரர் உயர் நீதிமன்றம் வரை மனுக்கள் தாக்கல் செய்தார் என்றும், அவை தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றும் சொன்னால் எனக்கு தெரியாது. அந்த வழக்கில் பிரதிவாதிகள் சொத்து அவர்களுக்குப் பாத்தியம் என எதிர்வாதம் செய்ததாகச் சொன்னால் எனக்கு தெரியாது. தாயம்மாள் அவர் கிரையம் பெற்ற சொத்தில்தான் வீடு கட்டியுள்ளார் என்றும் அவர் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

9. தாயம்மாள் வீடு கட்டும்போது நாங்கள் எவ்வித ஆட்சேபணையும் செய்யவில்லை என்று சொன்னால் நான் பழனி டவுனுக்குள் குடியிருந்து வருகிறேன், எனக்கு தெரியாமல் வீடு கட்டிவிட்டார்கள். பழனி டவுனுக்கும்

கோதைமங்கலத்திற்கும் சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். என் வீட்டிற்கும், வழக்குச் சொத்திற்கும் இடையில் 1 முதல் 1.5 பர்லாங் தொலைவு மட்டுமே இருக்கும் என்று சொன்னால் ஒரு கிலோ மீட்டர் தூரம் இருக்கும். நான் வழக்குச்சொத்தின் விஸ்தீரணம், அதில் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்ததாகச் சொல்லப்படும் விஸ்தீரணம் எவ்வளவு என்பதை விளக்கமாகச் சொல்லி வரைபடத்துடன் வழக்கை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

10. நில அளவையர் மூலம் தாவாச்சொத்தை அடையாளம் காண நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவாச்சொத்து கூட்டுச்சுவாதீனத்தில் இருந்ததாகச் சொல்வதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். சாட்சி ஆவணங்கள் தன் கைக்கு வந்தால் தாக்கல் செய்வதாகக் கூறுகிறார். என் தகப்பனார் காலத்திலேயே வழக்குச்சொத்து விற்கப்பட்டுவிட்டது என்றும், வில்லங்கச்சான்றை தாக்கல் செய்தால் மேற்படி விபரங்கள் தெரிந்துவிடும் என்பதால் மேற்படி ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

11. 1ம் பிரதிவாதி மற்றும் அவரது சகோதரர் பெயருக்கு பட்டா மாறுதல் ஆனதற்காக ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 கணினி பட்டா 05.07.2025 அன்று இ–சேவா மையத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. தாவாச்சொத்து 30 வருடங்களாக எங்கள் குடும்பத்திலேயே இல்லை என்றும், 1ம் பிரதிவாதியின் வழிகாட்டுதலின்பேரில் இவ்வாறான வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

12. 1ம் பிரதிவாதி குணசேகரன் வழக்கில் முன்னிலையாமல் தோன்றாத்தரப்பினராக இருந்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. என் தகப்பனார் இறந்து சுமார் 40 வருடங்கள் இருக்குமா என்றால் 1984ம் வருடம்

இறந்துவிட்டார். என் தகப்பனார் இறந்து 30 வருடங்களுக்கும் மேல் ஆகிவிட்டது என்றும், காலம் கடந்து நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக சொத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தேனா என்றால் இல்லை. 2 முதல் 6 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய வழக்கு மூலம் இல்லை என்றால் சரியல்ல. எங்கள் குடும்பத்திலேயே இல்லாத சொத்திற்கு நான் வழக்கு தாக்கல் செய்துள்ளதாக சொன்னால் சரியல்ல. 6000 சதுரடி போக மீதமுள்ள நிலத்திற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என்னுடைய கைக்கு எந்த ஆவணமும் வரவில்லை. தாவா தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

(5ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2025.09.11 19:43:10 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.